# வீரமாமுனிவம்

(வீரமாமுனிவர் அறக்கட்டளைக் கருத்தரங்க மலர்)



தமிழ் உயராய்வு மையம்

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

மதுரை – 625018.

# நூல் குறிப்பு

நூல் : வீரமாமுனிவம்
(வீரமாமுனிவர் அறக்கட்டளைக் கருத்தரங்க மலர்)

பதிப்பாசிரியர்கள் :

முனைவர் க.லதா

முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி

முனைவர் இரா.ஏஞ்சல்

முனைவர் நா.ரேணுகா

உரிமை : தமிழ் உயராய்வு மையம்

பக்கம் : 10 + 83 = 93

பதிப்பு : முதற்பதிப்பு
ஏப்ரல் 2022

விலை : ₹150 / -

அச்சிட்டோர் : சிவா பதிப்பகம்
பார்சன் காம்ப்ளக்ஸ்,
பாத்திமா கல்லூரி எதிரில்,
மதுரை- 18.

வெளியீடு : தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
மதுரை- 18

# பொருளடக்கம்


பதிப்புரை

வாழ்த்துரை

அன்புரை

வழி வழியாக... பகிரல்கள்

அடிகளாரும் அரும்பணியும்

1. வீரமாமுனிவரின் இறைப்பணியும் இன்தமிழ்ப்பணியும் 1

2. மருத்துவரான மாமுனி 17

3. வீரமாமுனிவர் எழுத்துவழி கிறித்தவம் தமிழ்ப்பண்பாட்டுவயமாதல் 34

4. பரமார்த்தகுருவின் கதையில் நகைச்சுவை 47

5. படலம் பகரும் பசுமை நெறி 66

6. பின்னிணைப்புகள் 80

# மருத்துவரான மாமுனி

டே. ஆனி மரிய ஜான்சி,
உதவிப்பேராசிரியர்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி),
தமிழ் உயராய்வு மையம்,
மதுரை – 18.

'தம் குருவைப் போற்றிக் கொண்டாடுவோர், ரசிகர். தம் குருவைப் போல் வாழ்பவர் சீடர்' என்றொரு கருத்து உலகில் உண்டு. வீரமாமுனிவர், இயேசுவின் சீடர். இயேசுவைப் போற்றிப் புகழ்வதோடு அவரின் பணி நின்றுவிடவில்லை. இறையேசுவைப் போல் உடல், உள்ள நோய்களைக் குணமாக்கும் பணியையும் முனிவர் செய்துள்ளார். விலைமதிப்பற்ற மருத்துவ நூல்களைத் தமிழில் யாத்துள்ளார்.

வீரமாமுனிவர் அருளிய மருத்துவ நூல்கள் பற்றிய தெளிவு பலரையும் சென்றடையாத காரணத்தால், சிலருக்காவது அதனை எடுத்துரைக்கும் நோக்கில், முனிவரின் மருத்துவ நூல்கள் குறித்த ஆய்வு நூல்களை அடிப்படையாகக் கொண்டு, பகுப்பு முறைத் திறனாய்வாக இவ்வாய்வு அமைகிறது.

## முனிவரின் வாழ்வும் பணியும்

வட இத்தாலியின் வெனிஸ் மாநிலத்தில், மாந்துவா மாவட்டத்தில் உள்ள காஸ்திகிலியோனே என்னும் ஊரில் கி.பி.1680ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் நாளில் கொண்டல்போ பெஸ்கி, எலிசபெத் தம்பதியினருக்கு ஜோசப் கான்ஸ்டான்சியுஸ் பெஸ்கி என்னும் மாமுனிவர் பிறந்தார். இவர் தமது பதினெட்டாம் வயதில் கி.பி.1698ஆம் ஆண்டு, இயேசு சபையில் சேர்ந்தார். பிறகு ஓராண்டு காலம் (கி.பி.1700 - கி.பி.1701) தொடக்கநிலை ஆசிரியராக பணியாற்றி, பின் மெய்யியல் (கி.பி.1701 - கி.பி.1703) பயின்றார். அதனைத் தொடர்ந்து, (கி.பி.1703 - கி.பி.1706) நடுநிலை உயர்நிலை வகுப்புகளுக்கு இலத்தீன் இலக்கணமும், இலக்கியமும் கற்பித்தார். பிறகு (கி.பி.1706 - கி.பி.1710) சமயக் கல்வி கற்று, குருவாகத் (கி.பி.1709) திருநிலைப்படுத்தப்பட்டார் என்று "இத்தாலிநாட்டு

“வீரமா முனிவர் தைரிய நாதர் விரிதமிழ்க் கலைமணம் கமழும்
ஆரமா முனிவர் அகத்தியர் போல அருளினார் அரிய நன்னூல்கள்
சாரமாந் தேம்பா வணியினைத் தொடினும் தமிழ்மணங் கமழுமென் கரமே!
ஈரமா நெஞ்சில் இடம் பெற்ற நட்டால் இன்பமாய் மலருமென் வாழ்வே!”

-கவியோகி சுத்தானந்த பாரதியார்